Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 149

திங்கட்கிழமை 24 ஏப்ரல் 2023

சித்திரை 11 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



## நாளை தாயகத்தில் பொதுமுடக்கம்

# தமிழ் – முஸ்லிம் தலைமைகள் ஓரணியாக முழுமையான ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24

தமிழர் தாயகமான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நாளை செவ்வாய்க் கிழமை முன்னெடுக்கப்படவுள்ள பொதுமுடக்கத்துக்கு தமிழ், முஸ்லிம் கட்சித் தலைவர்கள் ஓரணியாக தமது பேராதரவைத் தெரிவித்துள்ளனர். அரசுக்கும், சர்வ தேச சமூகத்துக்கும் குறிப்பாக இந்தியாவுக்கும் தெளிவான செய்தியை எடுத்துரைப் பதற்கு மக்கள் தமது இயல்புவாழ்வை நிறுத்தி ஹர்த்தாலுக்கு முழுமையான ஒத்து ழைப்பு வழங்கவேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர். »09

## கல்வி நடவடிக்கைகள் நாளையதினம் முடங்கும்

ஆசிரியர் சங்கமும் ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப். 24
நாளை முன்னெடுக்கப்படும் ஹர்த் தாலுக்கு முழுமையான »10

## போக்குவரத்து இடம்பெறாது

யாழ்ப்பாணம், ஏப். 24
நாளை முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தாலுக்கு முழுமை »10

## சந்தைகள் நாளை மூடல்

யாழ்ப்பாணம், ஏப். 24
வடக்கு – கிழக்கு மாகாணங்களில் நாளை இடம்பெறவுள்ள »10

## சட்டத்தரணிகள் முன்னிலையாகார்

யாழ்ப்பாணம், ஏப். 24
தமிழர் தாயகத்தில் நாளை முன் னெடுக்கப்படும் ஹர்த்தா »10

## சலூன்கள் நாளை பூட்டு

யாழ்ப்பாணம், ஏப். 24
வடக்கு – கிழக்கில் நாளை இடம் பெறவுள்ள கடையடைப்பு »10

## ஹர்த்தாலுக்கு ஆதரவளியுங்கள்

புலம்பெயர் அமைப்புக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 24
நாளை முன்னெடுக்கப்படும் முழு அடைப்புப் போராட் »10



## நாளைய முழு முடக்கத்துக்கு இந்து அமைப்புக்களும் ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப். 24
தமிழர் தாயகத்தில் நாளை முன்னெடுக்கப்படவுள்ள முழு முடக்கப் போராட்டத்துக்கு ஆதீனங்களும், »11

## நாளைய ஹர்த்தாலுக்கு ஜே.வி.பி.யும் ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப். 24
கருத்து மற்றும் பேச்சு சுதந்திரத்தை பறிக்கும் மூர்க்கத்தன மான சட்டமே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம். »11

## கிழக்கிலும் பல தரப்புக்கள் ஹர்த்தாலுக்கு முழு ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப். 24
திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு சிவில் சமூகங் களும் அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் »11

## போராட்டங்களால்தான் நாடு வீழ்ச்சியடைந்ததாம்!

மஹிந்த ராஜபக்சவுக்கு கவலை

கொழும்பு, ஏப். 24
பிரயோசனமற்ற இப்படியான போராட்டங்கள் தான் நாட்டை கடந்த காலங்களில் படு »09

## ஹர்த்தாலால் நாட்டின் பொருளாதாரத்துக்கு பாதிப்பு

கூறுகிறார் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஏப். 24
ஹர்த்தால் போராட்டம் மக்களின் நாளாந்த வாழ்வாதா ரத்தை முடக்குகின்ற போராட்டமாக நாட்டின் பொரு »10

நெடுந்தீவு கோரக்கொலைகள்

## பணத்துக்காகவே கொலை செய்தேன்

கைதான சந்தேகநபர் வாக்குமூலம்

யாழ்ப்பாணம், ஏப். 24
நெடுந்தீவில் வயோதிபர்கள் ஐவரை கொடூரமாகக் கொலை செய்துவிட்டு தப்பி புங்குடுதீவில் தலைமறைவாகி »11

காணி மோசடி

## ஈ.பி.டி.பி. முன்னாள் தவிசாளரும் இன்னும் இருவரும் நேற்றுக்கைது

யாழ்ப்பாணம், ஏப். 24
தீவகத்தில் முறையற்ற வகையில் காணி ஒன்றை மோசடியான முறையில் தனது பெயருக்கு உரிமம் மாற்றிய குற்றச்சாட்டில் நெடுந்தீவுப் பிரதேசசபை யின் முன்னாள் தவிசாளர் சசிகரன் கைது »10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தை ஆதரிப்போர் தேசத்துரோகிகளே!

## அருட்தந்தை மா.சக்திவேல் காட்டம்

**வவுனியா, ஏப். 24**

**பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவை ஆதரிப்பவர்கள் தேசத் துரோகிகள் என்றே அடையாளப்படுத்தப்படுவார்கள். இவ்வாறு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

எதிர்வரும் வாரத்தில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மூலத்திலிருந்து உருவாக்கப்பட்டுள்ளது. இது ஜனநாயக விழுமியங்களை அழித்தொழிக்கும் நச்சு சட்டவரைவாகும். தனி மனித மற்றும் சமூகத்தினதும் உரிமைகளை அரச பயங்கரவாத இயந்திரங்களான பொலிஸ் மற்றும் படைகளின் சப்பாத்தின் கீழே வைத்து துவம்சம் செய்யவே வழி வகுக்கும். மனிதனை மனிதனாக ஏற்றுக்கொள்ளாது நடமாடித் திரியும் ஜடமாக வைக்கவே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு முன்வைக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கொடுமைகளைக் கடந்த 44 ஆண்டுகளாக அனுபவிக்கும் மக்கள், புதிய சட்டவரைவை ஒருமித்து எதிர்க்கவேண்டுமென அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு கோருவதோடு வடக்கு- கிழக்கில் எதிர்வரும் 25ஆம் திகதி (நாளை) நடக்கவிருக்கும் கடையடைப்புப் போராட்டத்துக்கும் ஆதரவு வழங்குகின்றது.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராக நாடுமுழுவதும் எதிர்ப்பு தோன்றியிருக்கும் நிலையில் 44 வருட காலமாகப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் அழிவுகளைச் சந்தித்த அனுபவம் கொண்டவர்களாக எந்தவகையிலும் புதிய சட்டவரைவு நடைமுறைக்கு வரக்கூடாது என்பதிலே உறுதியாக இருக்கவேண்டும். அதனை எதிர்ப்பதற்கான தார்மீகப் பொறுப்பும் எமக்குமுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவேண்டும். அத்தோடு புதிதாக முன்வைக்கப்பட்டிருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவும் எத்தகைய திருத்தங்களுடன் நாடாளுமன்றத்துக்கு வரக்கூடாது. அவ்வாறு நாடாளுமன்றத்துக்கு வந்தால் அதனை ஆதரிப்பவர்கள் மக்கள் துரோகிகள், தேசத்துரோகிகள் என்றே அடையாளப்படுத்தப்படுவார்கள்- என்றுள்ளது. (ம-14,110)




## ஒரே குடும்பத்தவர் மூவர் வாகன விபத்தில் காயம்!

முல்லைத்தீவு, ஏப். 24

ஒன்றன்பின் ஒன்றாகப் பயணித்த இரண்டு வாகனங்கள், முன்னால் சென்ற மோட்டார் சைக்கிளை மோதியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று நபர்கள் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. புதுக்குடியிருப்பு பிரதேசத்திலுள்ள பிரதேசசபை பொதுவிளையாட்டு மைதானத்தில் படையினரின் ஏற்பாட்டில் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டுப் போட்டி நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதனால் பரந்தன் வீதியில் போக்குவரத்து நெருக்கடி அதிகமாகக் காணப்பட்டது.

இதனால் இந்த விபத்து சம்பவித்திருக்கலாம் என்று சொல்லப்படுகின்றது. காயமடைந்தவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

விபத்தை ஏற்படுத்திய வாகனங்களின் சாரதிகள் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம14,19)

## பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் மிருகத்தனத்தின் வெளிப்பாடு

### சஜித் ஆவேசக் கருத்து

கொழும்பு, ஏப். 22

முன்வைக்கப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினூடாக அரசாங்கத்தின் கோரமுகம் வெளிப்படும். மக்களின் ஜனநாயக உரிமைகள் அழிக்கும் இந்தப் பயங்கரமான சர்வாதிகார சட்டத்தை முற்றாகத் தோற்கடிப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவுக்கு மகாசங்கத்தினர், சர்வமதத் தலைவர்கள், பல்லின அமைப்புகள் மற்றும் சிவில் சமூகத்தினர் உட்பட பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பை வெளியிட்டே வருகின்றனர். இந்தச் சட்டம் நடைமுறையானால் அரசாங்கத்தின் மிருகத்தனம் வெளிப்படும். ஜனநாயக உரிமைகளை அழிக்கும் நோக்கிலேயே இந்தச் சட்டத்தை அரசாங்கம் கொண்டுவருகிறது. இந்த நோக்கத்தை முறியடித்து இந்தச் சர்வதிகார எதேச்சதிகார சட்டத்தைத் தோற்கடிப்போம் - என்றார். (ச-இ)

## வவு. வர்த்தகர் மீது கொடூரத் தாக்குதல்

### ஒருவர் கைது!

வவுனியா, ஏப். 24

வர்த்தக நிலையத்துக்கு முன்பாக சிறுநீர் கழிக்க வந்தோரை, அங்கு சிறுநீர் கழிக்காது பொதுக் கழிப்பறைக்குச் செல்லுமாறு தெரிவித்த வர்த்தகர் மீது மூவரடங்கிய வன்முறைக் குழுவொன்று கொடூரத் தாக்குதல் நடத்தியுள்ளது.

வவுனியா பழைய பேருந்து நிலையப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தாக்குதலில் காயமடைந்த வர்த்தகர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் ஒருவரைக் கைதுசெய்துள்ளனர். (ம-14,18)

## உடைமையில் கஞ்சா இளைஞன் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 24

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் சந்திப் பகுதியில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நடவடிக்கையின்போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டதுடன், அவரிடமிருந்து 700 மில்லிகிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-125)

## ஹெரோய்னுடன் கைதானார் யுவதி

யாழ்ப்பாணம், ஏப். 24

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோண்டாவில் பகுதியில் உயிர்கொல்லி போதைப் பொருளான ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் யுவதியொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகத்துக்குரிய முறையில் நடமாடிய யுவதியை சோதனைக்குட்படுத்தியபோதே அவரிடமிருந்து மேற்படி ஹெரோய்ன் மீட்கப்பட்டது. கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபரான யுவதிக்கு 21 வயது. அவர் குப்பிளான் பகுதியைச் சேர்ந்தவர்.

சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-125)

## இலங்கையில் வறுமை தொடரும்

### உலக உணவுத்திட்டம் அறிக்கை

கொழும்பு, ஏப். 24

இலங்கையில் பொருளாதார நெருக்கடியை அடுத்து ஏற்பட்ட தொழில் வாய்ப்பு இழப்பு, உயர் உணவுப்பணவீக்கம், வரையறுக்கப்பட்டளவிலான உரம் மற்றும் எரிபொருள் விநியோகம் என்பவற்றின் விளைவாக வறுமை உயர்வடைந்திருப்பதுடன், அது எதிர்வரும் வருடங்களிலும் செல்வாக்குச் செலுத்தும் என்று உலக உணவுத்திட்டம் தெரிவித்துள்ளது.

உலக உணவுத்திட்டத்தால் வெளியிடப்பட்டுள்ள 2022ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

வெளிநாட்டுக்கையிருப்பு வீழ்ச்சி, விவசாய உற்பத்திகளின் வீழ்ச்சி, அரசியல் உறுதித்தன்மையற்ற நிலை, உயர்வான பணவீக்கம் மற்றும் பொதுக்கடன்களின் அதிகரிப்பு ஆகியவற்றின் விளைவாகக் கடந்த 2022ஆம் ஆண்டு இலங்கை மிகமோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்தது. அதேபோன்று கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு, போசணை வழங்கல் மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகிய சேவைகளில் ஏற்பட்ட இடையூறுகளின் காரணமாகக் கடந்த வருடம் சிறுவர்கள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டனர். யுனிசெப் அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் 5 வயதுக்கும் குறைந்த 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் தீவிர மந்தபோசணைக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கை அரசாங்கத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக உலக உணவுத்திட்டத்தால் வழங்கப்பட்ட உடனடி உதவிகள் மூலம் சுமார் 14 இலட்சத்து 15 ஆயிரம் பேர் பயனடைந்துள்ளனர் - என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத தொழிற்சாலையின் செயற்பாட்டை உடன் நிறுத்துக

## வலி.தெற்கு பிரதேசசபை உத்தரவு

**யாழ்ப்பாணம், ஏப். 24**

**வலி.தெற்கு பிரதேசசபைக்குட்பட்ட சுன்னாகம் பகுதியில் சட்ட விரோதமாக இயங்கும் அலுமினியப்பாத்திரம் உற்பத்தித் தொழிற்சாலையின் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்தவேண்டும் என்று வலிகாமம் தெற்கு பிரதேசசபை உத்தரவிட்டுள்ளது.**

> **"பிரதேசத்தின் வளிமண்டலம், நிலம், நிலத்தடிநீர் ஆகியன தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் அலுமினியக் கழிவுகளால் மாசடைந்து, தாம் வாழும் சூழல் அலுமினியம் நஞ்சூட்டலுக்கு உட்படுகின்றது, இது எமது உயிர் வாழ்வுக்கு அச்சுறுத்தலானது."**

சுன்னாகம் ஐயனார்கோவிலுக்கு மிக அண்மித்த பகுதியில் வசிக்கும் குடியிருப்பாளரான வர்த்தகர் ஒருவர் சட்டவிரோதமாக தனது வீட்டின் காணிக்குள் அலுமினியப் பாத்திர உற்பத்தித் தொழிற்சாலையை நிறுவி நடத்துகிறார் என அயலவர்களால் மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர், உள்ளூராட்சி ஆணையாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் செயலர் ஆகியோருக்கு முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

பிரதேசத்தின் வளிமண்டலம், நிலம், நிலத்தடிநீர் ஆகியன தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் அலுமினியக் கழிவுகளால் மாசடைந்து தாம் வாழும் சூழல் அலுமினியம் நஞ்சூட்டலுக்கு உட்படுகின்றது. இது எமது உயிர் வாழ்வுக்கு அச்சுறுத்தலானது.

எல்லையில் மதில் கட்டுவதாகக் கூறி ஏமாற்றிய வர்த்தகர், உரிய அனுமதிகள் எதுவும் பெறாமல் சட்டவிரோதமான முறையில் தொழிற்சாலையை நிறுவியுள்ளார் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தொழிற்சாலைக்கான மேலதிக கட்டுமானங்கள் உரிய அனுமதிகள் எதுவுமின்றி சட்டவிரோதமாகத் தொடர்ந்தும் அமைக்கப்படுகின்றன என சுன்னாகம் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

அலுமினிய விஷம் மனித உடலுக்குத் தீவிரமான நோய்களை விளைவிக்கக்கூடியதாகும் என்பது மருத்துவரீதியாக நிரூபிக்கப்பட்டதாகும். எனவே உயிருக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் இயங்கும் அலுமினிய தொழிற்சாலையை அகற்ற உரிய அதிகாரசபைகளும் திணைக்களங்களும் தமக்குரிய கடமைகளையும் பொறுப்புக்களையும் சமூக பொறுப்புடன் நிறைவேற்ற வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

இதனையடுத்தே குறித்த பகுதியில் அலுமினியப் பாத்திர உற்பத்தித் தொழிற்சாலையை இயங்குவதற்கும் அது தொடர்பான கட்டுமானங்களைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை தடை உத்தரவு பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-14)

# தவிசாளர் பதவிநீக்கம் பெரமுனவில் பூகம்பம்!

கொழும்பு, ஏப். 24

பொதுஜன பெரமுனவின் பொதுச் சபைக் கூட்டத்தில் தன்னை தவிசாளர் பதவியில் இருந்து நீக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் சட்டவிரோதமானவை. தீர்மானங்களைச் செல்லுபடியற்றதாக்கும் வகையில் நீதிமன்றத்தை நாடுவேன் என பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்:

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் கடந்த சனிக்கிழமை காலை இடம்பெற்ற பொதுச்சபைக் கூட்டம் சட்டத்துக்கு ஏற்புடையதல்ல. கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் முறையற்றதுடன் அவை செல்லுபடியாகும் தன்மையற்றன. பொதுச் சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும் சட்ட விரோதமானது என்பதை அறிவிக்க தேவையான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பேன் - என்றுள்ளது.

பொதுஜன பெரமுனவின் 2023ஆம் ஆண்டுக்கான பொதுச்சபை கூட்டத்தில் தவிசாளர் பதவியில் இருந்து ஜி.எல்.பீரிஸ் நீக்கப்பட்டு, சிரேஷ்ட பேராசிரியர் உதுராவெல தம்மரத்ன தேரர் தவிசாளராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# நாட்டை நாசமாக்கிய அணியுடன் ஒருபோதும் இணையமாட்டோம்!

## விமல் வீரவன்ஸ சாட்டை



கொழும்பு, ஏப். 24

'நாட்டை நாசமாக்கிய மஹிந்த தலைமையிலான அணியுடன் ஒருபோதும் இணையமாட்டோம்' என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் அந்தப் பக்கம், இந்தப் பக்கம் என மாறினாலும் எமது கொள்கை மாறவில்லை. அதுதான் முக்கியமானது. ஜே.வி.பி.யின் உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி அரசு சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லவேண்டுமென்று ஓரிடத்தில் பேசுகின்றார். இன்னோர் இடத்தில், அரசு சர்வதேச நாணய நிதியத்திடம் போகக்கூடாது என்று பேசுகின்றார். அவர்கள் ஓரிடத்தில் இருந்தாலும் கொள்கையில் நிலையாக இல்லை. நாங்கள் இடம் மாறினாலும் கொள்கை மாறவில்லை. கொள்கை தான் முக்கியமே தவிர இடமல்ல.

இது எமக்குச் சாதகமான கொள்கை அல்ல. இதனால் எதிரிகள் அதிகம் வளருவார்கள், எதிர்ப்புகள் கூடும். எமக்கு எதிரான தாக்குதல்கள்கூடும். உயிராபத்து ஏற்படக்கூடிய வாய்ப்புகளும் உள்ளன. எனினும் நாட்டை நாசமாக்கிய மஹிந்த தலைமையிலான அணியுடன் இணையமாட்டோம். அது ஒருபோதும் நடக்காது - என்றார். (ம-14-22)




'பிச்சை எடுக்குதாம் பெருமாள், அதைத் தட்டிப் பறிச்சதாம் அனுமர்' எண்டமாதிரி ஒரு சம்பவம் காதும் காதும் வைச்சமாதிரிக் கிட்டடியில நடந்திருக்கு. எந்த அரசாங்கம் வந்தாலும் அவையின்ர காலைக் கையைப் பிடிச்சு, காரியம் சாதிக்கக்கூடியவர் 'நாமச்சந்தன மூர்த்தி'. எல்லாருக்குமே நாமம் போடக்கூடிய அவரின்ர கைச்சுத்தத்தின்ர விறுத்தம் யாழ்ப்பாணத்தில உள்ள அத்தனை பேருக்கும் தெரியும். இப்பிடிப்பட்டவர் இந்து மதத்தையும், பௌத்தத்தையும் இணைச்சு வைக்கிறன் எண்டு ஒரு அமைப்பைத் தொடங்கி, அந்த அமைப்பு மூலமா சிங்களம் படிச்சால் ரீச்சராகலாம் எண்டு கனபேருக்கு ஆசை காட்டி, காசை ஆட்டையைப் போட்ட கதையை முந்தி ஒருக்கா பட்சி சொல்லியிருந்தது. அதுக்குப் பிறகும் ஆள் திருந்திறமாதிரி இல்லை. இப்ப இன்னொரு வகையில 'நாமம்' போட்டிருக்கிறார் அவர்.


தன்ர அமைப்பில சிங்களம் படிச்ச சிலருக்கு பள்ளிக்கூடங்களில 6 மாசத்துக்கு தற்காலிகமாக படிப்பிக்கிறதுக்கு எப்பிடியோ மேலிடத்தில எழுத்துமூல அனுமதி எடுத்திட்டார். அதின்படி, வடக்கில கிட்டத்தட்ட 150 பேருக்கு 6 மாசம் தற்காலிகமாகப் படிப்பிக்கிறதுக்கு கடிதம் குடுபட்டிருக்கு. அந்தக் கடிதத்தில 'இந்த நியமனம் 6 மாசத்துக்கு மட்டும்தான்; ஒருக்காலும் சம்பளமும் தரமாட்டம்' எண்டும் தெளிவாச் சொல்லப்பட்டிருந்தது. இப்ப அந்த ஆறுமாசம் முடிஞ்சு அவை எல்லாரும் பழையபடி வீட்டில குந்தியிருக்கினம். இதுக்கும் எங்கட 'நாமச் சந்தனமூர்த்தியின்ர' திருவிளையாடலுக்கும் என்ன சம்பந்தம்? எண்டு நீங்கள் யோசிக்கலாம், சம்பந்தமிருக்கு.

இப்பிடி தற்காலிகமா படிப்பிக்கத் தெரிவு செய்யப்பட்ட ஆக்களில சிலபேர் அந்தக் கடிதத்தை எடுக்கவும் போகேல, படிப்பிக்கவும் போகேலை. ஏன் அவை அப்பிடி படிப்பிக்கப் போகேலை? எண்டு விசாரிச்சுப் பார்த்தால் அந்தக் கடிதத்தைத் தாறதெண்டால், 2 இலட்சம் 'நாமக்காரர்' கட்டச் சொன்னவர். எங்களிட்ட அந்தளவு காசு இல்லை. அதால போகேலை எண்டிருக்கினம். அதுக்குப் பிறகு டிப்பார்ட்மெண்ட்காரர் இன்னும் வடிவா விசாரிச்சால், ஆறுமாசத்துக்கும் சம்பளம் இல்லாமல் சிங்களம் படிப்பிக்க வந்தவையில கனபேர் இப்பிடி 2 இலட்சப்படி 'நாமக்காரருக்கு' கட்டியிருக்கினம். அப்பிடிக் காசு கட்டினால், தொண்டர் ஆசிரியருக்கு நியமனம் குடுக்கேக்க, இதைச் சாட்டி அவைக்கும் நியமனம் வாங்கிக் குடுப்பன் எண்டு சொல்லியிருக்கிறாராம். ஆனால் அப்பிடியெல்லாம் இந்த சம்பளமில்லாமல் சிங்களம் படிப்பிச்சவைக்கு தொண்டர் ஆசிரியர் நியமனம் குடுக்கிறதுக்கு நூறுவீதம் சான்ஸே இல்லை எண்டு டிப்பார்ட்மெண்ட்காரர் கற்பூரம் கொளுத்திச் சத்தியம் செய்யாத குறையாச் சொல்லுகினம். ஓராளுக்கு 2 இலட்சம் எண்டா, கிட்டத்தட்ட 100 பேரிட்ட வாங்கியிருந்தாலும் 2 கோடியை இருந்த இடத்திலேயே ஏப்பம் விட்டிருக்கிறார் இந்த நாமக்காரர். 'ஐயோ ராமா, ஏனிப்பிடி எங்களைச் சோதிக்கிறாய்?' எண்டு பாதிக்கப்பட்டவை புலம்பித்திரியினமாம்.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரணியில் மினிசூறாவளி ஆலயம், வீடுகள் சேதம்

சாவகச்சேரி, ஏப். 24

தென்மராட்சி - வரணிப் பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஏற்பட்ட கனமழையுடன் மினி சூறாவளி வீசியுள்ளது. இதனால் அந்தப் பகுதியில் பல சேதங்கள் ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாவற்காடு, கரம்பைக்குறிச்சி, இடைக்குறிச்சி மற்றும் வரணி மருத்துவமனை உள்ளிட்ட பகுதிகளில் சேதங்கள் கூடுதலான அளவில் பதிவாகியுள்ளன. பல இடங்களில் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன. போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மின்கம்பங்கள் மற்றும் மின்வடங்கள் என்பவற்றின் மீதும் மரங்கள் வீழ்ந்தமையால் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

அத்துடன் நாவற்காடு பகுதியில் வயல்கரை அண்ணமார் ஆலயம் ஒன்றின் மண்டபம் மற்றும் மடப்பள்ளி முற்றாகச் சேதமடைந்துள்ளதுள்ளதுடன் சில வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. (ம-14,159)

# குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஏப். 24

யாழ்ப்பாணப் பிரதேச செயலக நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம், இன்று திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை பிரதேசசெயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-14,66)

# ரயிலிலிருந்து வீழ்ந்து சிறுவன் காயம்

கொழும்பு, ஏப். 24

கொழும்பில் இருந்து பதுளை நோக்கிச் சென்ற ரயிலில் இருந்து வீழ்ந்து காயமடைந்த நிலையில் சிறுவன் ஒருவன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான் எனப் பொலிஸார் தெரிவித்தனர். நேற்றுமுன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ரயிலின் மிதிபலகையில் அமர்ந்து பயணித்தபோது சுரங்கத்தில் மோதி சிறுவன் கீழே விழுந்துள்ளான் என விசாரணையில் தெரிய வந்துள்ளது எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ச-இ)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஏப். 24

வலி.கிழக்கு வடபகுதி ப.நோ.கூ.சங்கம் அச்சுவேலி, யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை ஆகியன இணைந்து மகளிர் அங்கத்தவர்களுக்கான சுயதொழில் முயற்சியை ஊக்குவிக்கும் வகையிலான அடிப்படை தையல் பயிற்சி, சிகை அலங்காரம், கேக் ஐசிங் போன்ற பயற்சிகளை இலவசமாக வழங்கவுள்ளன.

எனவே சங்க எல்லைப்பரப்பில் உள்ள மகளிரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை சங்கத்தின் ஆவரங்கால் தலைமைக்காரியாலயத்தில் பெற்று எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-14,11)



# மரக்கறிகளின் விலை வீழ்ச்சி

சாவகச்சேரி, ஏப். 24

தென்மராட்சிப் பிரதேச சந்தைகளில் மரக்கறிகளின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்தையொட்டி உச்ச விலையில் காணப்பட்ட கத்தரிக்காய், பயிற்றங்காய், தக்காளிப்பழம் போன்றவற்றின் விலைகள் தற்போது வீழ்ச்சியடைந்து வருகின்றன.

பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறிவகைகள் பெருமளவில் சந்தைகளுக்குக் கொண்டு வரப்படுவதால் விலைகள் மேலும் வீழ்ச்சியடையலாமென வியாபாரிகள் தெரிவித்தனர். (ம-14,9)



# சோபகிருது

## தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள்




கடினமான காரியங்களையும் எளிதில் செய்து முடித்துவிடும் வல்லவர் நீங்கள். உங்கள் ராசிக்கு 6ல் சோபகிருது ஆண்டு பிறப்பதால், எதையும் சாதிக்கும் வல்லமை பிறக்கும். குடும்பத்தாரின் உணர்வுக்கு மதிப்பளிப்பீர்கள். தன்னம்பிக்கை பிறக்கும்.

21.4.2023 வரை 8ம் வீட்டில் குரு இருப்பதால் இனம் புரியாத கவலை, நம்பிக்கையின்மை, வீண் அலைச்சல், வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும்.

22.4.2023 முதல் வருடம் முடியும் வரை 9ம் வீட்டில் குரு அமர்வதால், இடையூறுகளைக் கடந்து வெற்றி பெறுவீர்கள். அமைதியாக இருந்து காரியம் சாதிப்பீர்கள். குடும்பத்தில் தள்ளிப் போன சுப நிகழ்ச்சிகளெல்லாம் ஏற்பாடாகும்.

14.4.2023 முதல் 25.8.23 வரை மற்றும் 20.12.2023 முதல் வருடம் முடியும் வரை சனிபகவான் உங்கள் ராசிக்கு 7ல் கண்டகச் சனியாக அமர்வதால் சிறு சிறு விபத்துகள், ஏமாற்றங்கள், பண இழப்புகள் வந்து போகும்.

26.8.2023 முதல் 19.12.2023 வரை உங்கள் ராசிக்கு சனி 6ல் நிற்பதால் புகழ், கௌரவம் உயரும். உங்கள் உதவியால் வளர்ச்சி அடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவுவார்கள்.

புகழ், கௌரவம் உயரும். உங்கள் உதவியால் வளர்ச்சி அடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவுவார்கள்.

வருடப் பிறப்பு முதல் 7.10.2023 வரை 3ம் வீட்டில் கேது நிற்பதால் திடீர் பண வரவு உண்டு. தடைகள் விலகும். 9ல் ராகு இருப்பதால் தந்தைக்கு மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். 8.10.2023 முதல் வருடம் முடியும் வரை உங்கள் ராசி 2ல் கேதுவும், 8ல் ராகுவும் நுழைவதால் பேச்சில் கடுமை காட்டாதீர்கள். வேலைச் சுமை அதிகரிக்கும். நண்பர்களால் மன உளைச்சல் வரக்கூடும். திடீர்ப் பயணங்கள் அதிகரிக்கும்.

உத்தியோகத்தர்களே! மேலதிகாரி உங்களைப் புரிந்துகொள்வார். புதிய பொறுப்புகள் வந்து சேரும். வேலைச்சுமை அதிகரித்தாலும் விரைந்து முடிப்பீர்கள்.

மறைமுக எதிர்ப்புகள் இருந்தாலும் அவற்றைத் தகர்த்தெறிவீர்கள். எதிர்பார்த்த சலுகைகள் தாமதமானாலும் உறுதியாக கிடைக்கும்.

**மொத்தத்தில் இந்தச் சோபகிருது வருடம், உங்களின் பண பலத்தை உயர்த்துவதாகவும் பழைய பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதாகவும் அமையும்.**

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நாள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தாயாரின் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்களால் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**மிதுனம்:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயல்படு வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். வீண் செலவுகள் ஏற்படும். தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் உதவியுடன் சுபநிகழ்ச்சி சாதகமாக முடியும். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த பணம் கிடைக்கும். பிணக்குகள் நீங்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். ஆதாயம் உண்டாகும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பதுநல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். செலவு செய்யவேண்டி வரும்.

**விருச்சிகம்:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். லாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**மகரம்:** கருத்துவேறுபாடு நீங்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரும். உணவு விடயத்தில் கவனம் தேவை. எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைக்கும்.

**கும்பம்:** சிறு சிறு கருத்துவேறுபாடுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**மீனம்:** எடுத்தகாரியம் அனுகூலமாகும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## மாடு கடத்தும் மாபியாக்களும் தவறவிடப்பட்ட கடமைகளும்!

யாழ்ப்பாணத்தில் மாடுகளைக் கடத்தி இறைச்சியாக்கும் மாபியாக் கும்பலொன்று பொலிஸால் அடையாளம் காணப்பட்டு அதன் சூத்திரதாரி கைதுசெய்யப்பட்டிருக்கின்றார். குடாநாட்டில் கடந்த பல மாதங்களாக நூற்றுக்கணக்கான மாடுகள் காணாமலாக்கப்பட்டும், எச்சங்களாக பற்றைக் காடுகளுக்குள் இருந்து தொடர்ச்சியாக மீட்கப்பட்டும் கொண்டிருந்த பின்னணியில் பொலிஸாரின் இந்தக் கைது நடவடிக்கை மேற்படி இழிசெயல்களை இல்லாதொழிக்கும் நம்பிக்கையைத் துளிர்க்கச் செய்திருக்கின்றது.

வடமாகாணத்தில் விவசாயத்துக்கு அடுத்தபடியாக ஆகப் பெரும் பொருளாதாரச் சுழற்சியை கால்நடை வளர்ப்புத் துறையே கொண்டிருக்கின்றது. இவ்வாறிருக்கையில் மாடுகளைத் திருடி, சட்டவிரோதமாக இறைச்சியாக்குவதென்பது அந்த மாடுகளை வளர்க்கும் குடும்பத்தின் பொருளாதாரத்தையே கொன்று புதைப்பதற்கு ஒப்பான செயலே. அத்துடன் இது வெறுமனே பொருளாதாரத்தை மையமாகக் கொண்ட விவகாரமும் அல்ல. எல்லாவற்றுக்கும் மேலாக குறைந்த பட்ச ஜீவகாருண்யம்கூட இல்லாத அரக்கத்தனத்தின் உச்சமும் கூட. திருடிச்செல்லப்பட்டு, சட்டவிரோதமாக இறைச்சியாக்கப்பட்ட பின்னர் மீட்கப்பட்ட எச்சங்களில் ஏராளமானவை பசுக்களுடையவை. சினைப்பசுக்களின் வயிற்றைக் கிழித்து கன்றுகளைத் தூக்கிவீசிவிட்டு அவற்றை இறைச்சியாக்கிய கொடூரங்கள் சொல்லிமாளாதவை. இதனால், இந்த மாடுகடத்தும் மாபியாவின் முழுமையான வலைப்பின்னலை விசாரணைகள் மூலம் வெளிப்படுத்தி, கூண்டோடு அவர்கள் அனைவரையும் கைதுசெய்ய வேண்டியது பொலிஸாருக்கு முன்புள்ள கடமையும் பெரும் பொறுப்புமாகும்.

இதேவேளை– மாடுகடத்தும் மாபியாவை மட்டும் நொந்து கொண்டு கடந்துசெல்லும் விடயமும் இதுவல்ல என்பதே கசப்பான உண்மை. குடாநாட்டில் மாடுகளை இறைச்சியாக்குவதற்கும் அவற்றை விற்பனை செய்வதற்கும் இறுக்கமான பொறிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. மாடுகளை இறைச்சியாக்கும் கொல்களத்துக்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நேரில்சென்று அங்குள்ள சுகாதார நடைமுறைகளையும் இதர விடயங்களையும் பார்த்து உறுதிப்படுத்தவேண்டும். அத்துடன், மாட்டிறைச்சி விற்பனை நிலையங்களிலும் 'சீல் செய்யப்பட்ட' இறைச்சிதான் விற்பனை செய்யப்படுகின்றதா என்பதைப் பார்த்து உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு உரியதாகவே இருக்கின்றது. அவ்வாறிருக்கையில் சட்டவிரோதமாக, ஈவிரக்கமின்றிக் கொல்லப்பட்ட பசுக்கள் இறைச்சியாக்கப்பட்டு, மாட்டிறைச்சிக் கடைகளில் தாராளமாக விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன. அப்படியானால், இந்த மாபியா பெருமெடுப்பில் வியாபித்து வினையாற்றுவதற்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தம் கடமையில் இருந்து தவறியமையும் முதன்மைக் காரணமே.


பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கொல்களங்களையும், இறைச்சிக்கூடங்களையும் உரியமுறையில் சோதனையிட்டிருந்தால் தங்கள் கண்காணிப்பிலும் கடமையிலும் உறுதியாக இருந்திருந்தால் இவ்வாறானதொரு மாபியா தோற்றம் பெறுவதற்குரிய சாத்தியங்கள் இருந்திருக்காதே. ஆதலால், இதற்கு முழுமுதற் காரணகர்த்தாக்களாக உள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தொடர்பிலும் தீவிரமான விசாரணைகள் நடத்தப்படுவது தவிர்க்கமுடியாத் தேவையாகவே இருக்கின்றது.

மாடுகளைக் கடத்தும் மாபியா அடையாளம் காணப்படாமல் இருந்தால் அது வேறுவிடயம். அந்த மாபியாவை அடையாளம் காணப்பட்ட பின்னர் இவ்வாறான சம்பவங்கள் 'மீண்டும் நிகழாமையை' உறுதிப்படுத்த வேண்டியது துறைசார் அதிகாரிகள் முன்புள்ள பெரும் பொறுப்பாகும். எனவே, இந்த விடயத்தை பத்துடன் பதினொன்றாகக் கருதி கடந்துவிடாமல் இது தொடர்பில் ஆழமாகவும் வினைத்திறனுடனும் செயலாற்றி இதுபோன்ற அடிவருடிகளை அடியோடு துடைத்தெறிய வேண்டியது காலத்தின் தேவையும் தவிர்க்கமுடியாத் தனமுமாகும்.

### நாளொரு நல்வார்த்தை

என்னை யார் தோற்கடித்தது என்று கோபத்துடன் பார்த்தேன். வேறு யாருமல்ல. என்னைத் தோற்கடித்தது கோபமே.

– ஹிட்லர்




## காலிமுகத்திடல் வன்முறை சந்தேகநபராக தேசபந்து!

### சட்டமா அதிபர் பணிப்புரை

**கொழும்பு, ஏப். 24**

**காலிமுகத்திடலில் கடந்த ஆண்டு மே 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறை தொடர்பான வழக்கில் சந்தேகநபர்கள் பட்டியலில் மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பெயரிடுமாறு பொலிஸ்மா அதிபருக்கு சட்டமா அதிபர் பணித்துள்ளார்.**

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை தாக்கியவர்களுக்கு உதவியமை, கடமைகளைச் செய்யத் தவறியமை ஆகிய குற்றச்சாட்டுகளை முன்வைத்து அவரைச் சந்தேகநபராகப் பெயரிடுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த வன்முறைச் சம்பவம் தொடர்பில் மேலும் 33 பேர் சந்தேகநபர்களாகப் பெயரிடப்படவேண்டும். அவர்களில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த ஆகியோர் உள்ளடங்கப்பட வேண்டும் எனப் பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்றும் கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அதேவேளை தற்போதைய பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவின் ஓய்வுக்குப்பின் தேசபந்து தென்னக்கோன் புதிய பொலிஸ்மா அதிபராக பதவியேற்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## சீனாவுக்கு குரங்குகள்; மோசடியென சந்தேகம்

கொழும்பு, ஏப். 24

இலங்கையிலிருந்து குரங்குகளை சீனாவிலுள்ள மிருக்கக்காட்சிச்சாலைக்காக பெறமுயன்றமை மோசடி நடவடிக்கையாக இருக்கலாம் என்று இலங்கை அரசாங்கம் சந்தேகம் வெளியிட்டுள்ளது.

இலங்கையிலிருந்து குரங்குகளை கோரிய சீன நிறுவனத்தின் விவரங்களைத் தருமாறு சீனத் தூதரகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என விவசாய அமைச்சின் செயலாளர் குணதாஸ சமரசிங்க தெரிவித்துள்ளார்.

சீனாவிலுள்ள மிருகக்காட்சிசாலைகளுக்கு இலங்கைக் குரங்குகளை வழங்குமாறு சீனாவிலுள்ள நிறுவனமொன்றின் பிரதிநிதிகள் குழு கோரிக்கை விடுத்திருந்தது. இந்த விடயம் சாத்தியமா என்பது குறித்து ஆராய அமைச்சுக்களின் அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்தக் குழு முன்னெடுத்த பரிசீலனையின்போது, சீன நிறுவனத்தால் விடுக்கப்பட்ட கோரிக்கைக் கடிதத்தில் கையெழுத்து எதுவுமின்றி நிறுவனத்தின் இலச்சினை தலைகீழாக பொறிக்கப்பட்டுள்ளது. இது சீன மொழி தெரியாத ஒருவரின் மோசடி நடவடிக்கையாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இதையடுத்தே இலங்கையிலிருந்து குரங்குகளை கோரிய சீன நிறுவனத்தின் விவரங்களைத் தருமாறு அரசாங்கம் கேட்டுள்ளது. (ச-இ)

**நாளை**

**25.04.2023**
**செவ்வாய்க்கிழமை**
**சித்திரை 12**

சுபநேரம் : 10.30 - 12.00
ராகுகாலம் : 03.00 - 04.30

ஷஷ்டி விரதம்
உலக மலேரியா தினம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சை மாணவர்களுக்கு இலவச சுயகற்றல் ஏடுகள்

யாழ்ப்பாணம், ஏப். 24
பாரி அறக்கட்டளை கல்விக்கான சமூகப் பணி அமையத்தின் நிறுவுநர் அமரர் நடராசா விமல ரஞ்சிதன் ஞாபகார்த்தமாக அவரது பாரியாரின் 3.1 மில்லியன் ரூபா நிதிப்பங்களிப்பில் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு இலவசமாக சுயகற்றல் ஏடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்வி நிலைய மாணவர்களுக்கு சுயகற்றல் ஏடுகள் கடந்த வியாழக்கிழமை கையளிக்கப்பட்டன. வலயக்கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்கள் ஊடாகத் தெரிவு செய்யப்பட்ட 4 ஆயிரம் மாணவர்களுக்கு இந்த ஏடுகள் வழங்கப்படவுள்ளன. (ச-125)

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 15 - 05 - 1932 |  | 20 - 04 - 2023 |

### வேலுப்பிள்ளை சின்னத்தம்பி

(பிரபல வர்த்தகர்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பிரபல வர்த்தகர் வேலுப்பிள்ளை சின்னத்தம்பி அவர்கள் கடந்த (20.04.2023) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பரமசாமி - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற குணபூரணத்தின் பாசமிகு கணவரும், ரவி, ராசேந்திரம், பாமா, காலஞ்சென்றவர்களான சேகர், சபேசன், பகீரதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கோமதி, கவிதா, தருமராஜா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பூமணி காலஞ்சென்றவர்களான கந்தையா, செல்லத்தம்பி, செல்லம்மா, இராசம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், பரஞ்சோதி, சீதையம்மா, தங்கமணி, முருகேசுப்பிள்ளை காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை, திருச்செல்வம் மற்றும் உதயகுமாரன், புஸ்பராணி, லீலாவதி, இன்பரதி, லலிதா, ஆகியோரின் பாசமிகு தாய் மாமனாரும், துவாரகா, பிரதீபன், பிருந்தா, கபில்நாத், நித்தியா, சானுஜா, அஸ்வினி துவாரகன், கிரிதரன், தட்சிகா ஆகியோரின் பாசமிகு பேரனாரும், மீலா, னேகா, அகேன் ஆகியோரின் பாசமிகு பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.04.2023) செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணியளவில் கலைவாணி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

(CS 24580)(K-1)

**தகவல் : குடும்பத்தினர்**

# சுன்னாகம் நூலகத்தில் புத்தக தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப். 24
சுன்னாகம் பொதுநூலக நிர்வாகத்தின் ஏற்பாட்டில் உலக புத்தகதின நிகழ்வு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நூலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது:
வலி.தெற்குப் பிரதேசசபையின் செயலாளர் சாரதா உருத்திரசம்பவன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக, வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா கலந்துகொள்ளவுள்ளார். (ம-14,66)

# கால்கோள் விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஏப். 24
சண்டிலிப்பாய் மேற்கு மணிமேகன் முன்பள்ளியின் 2022 ஆம் ஆண்டு மாணவர்களின் பரிசளிப்பு விழாவும் 2023 ஆம் ஆண்டு மாணவர்களின் கால்கோள் விழாவும், முன்பள்ளி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் தர்மகுலசிங்கம் அரங்கமும் திறந்துவைக்கப்பட்டது. முன்பள்ளித் தலைவரும் ஓய்வுபெற்ற அதிபருமான ஸ்ரீகாந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்பள்ளியின் போஷகர் க.தர்மகுலசிங்கம் கலந்துகொண்டார். (எ-14)

## வீட்டுக்கிருத்திய கிரியைகள் பிற்போடப்பட்டுள்ளது

கடந்த (26.03.2023) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த
எமது குல விளக்கு

### அமரர் திருமதி மகாலிங்கம் சுலோசனாதேவி




அவர்களின் 25.04.2023 செவ்வாய்க்கிழமை அன்று முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற இருந்த அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகளும் அதனைதொடர்ந்து நடைபெறவிருந்த மதியபோசன நிகழ்வும் **தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது இக்கிரியைகள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்**

**இருபாலை றோட்,**
**வன்னியசிங்கம் வீதி,**
**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(cs.50142) (N.1)

## மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 15 . 10 . 1942 |  | 21 . 04 . 2023 |

### அருணாசலம் சிவநாதன்

(உரிமையாளர் - ஸ்ரீ ஸ்கந்த பவனம் அரிசி ஆலை,
அகில இலங்கை சமாதான நீதவான்)

சின்னப்புதுக்குளம், வவுனியாவைப் பிறப்பிடமாகவும், சின்னப்புதுக்குளம் மற்றும் நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட அருணாசலம் சிவநாதன் (உரிமையாளர் - ஸ்ரீ ஸ்கந்த பவனம் அரிசி ஆலை, அகில இலங்கை சமாதான நீதவான்) கடந்த (21.04.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம், சின்னம்மா தம்பதியரின் ஏக புதல்வனும் கமலாதேவியின் அன்புக் கணவரும், அருண்மொழி (HNB-Vavuniya), அரவிந்தன் (Manager, HSBC - Jaffna), அம்பிகை (Canada), ஆரூரான் ( Business Analyst - Vancouver), ஆர்த்திகா (Management Assistant - ATI, Jaffna) ஆகியோரின் அன்புத் தந்தையும், உதயகுமார் (அதிபர், கூமாங்குளம், சித்தி விநாயகர் வித்தியாலயம்), கலாநிதி சுகன்யா (சிரேஷ்ட விரிவுரையாளர் - யாழ். பல்கலைக்கழகம்), சிவநேசன் (Seatply,Canada), துவாரகா (Social Security Councilor - Vancouver), வேதகிரீஸ்வரன் (ATI, Jaffna) ஆகியோரின் மாமனாரும், கங்கேஷ்வர் (Software Engineer - Colombo), புருஷோத்தமன் (வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்), கிருஷிகா (வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலம்), ஆதித்யா + சஹானா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), அபராஜிதன் (யாழ். இந்துக் கல்லூரி), ஹம்சத்வனி + ஜர்ஷன் + ஹம்சிகா + ஜர்ஷிகா (Canada), அதீனா + ஆதீஷ் (Vancouver) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (23.04.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிமுதல் இல.64, அரச வீதி, நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு இன்று (24.04.2023) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**மகன்மார் - அரவிந்தன் (0777 589 728), ஆரூரான்**
**மகள்மார் - அருண்மொழி (0777 571 955),**
**அம்பிகை - (+ 1514 948 5217), ஆர்த்திகா (0766 859 723)**

(CS/501...)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 09 . 07 . 1950 |  | 22 . 04 . 2023 |

### பத்மநாதன் பத்மாதேவி (சின்னமணி)

நீர்வேலி வடக்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் பத்மாதேவி (சின்னமணி) கடந்த (22.04.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத்துரை இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பத்மநாதன் (முன்னாள் முகாமையாளர் மக்கள் வங்கி - யாழ்ப்பாணம்), அவர்களின் அன்பு மனைவியும், யமுனா, வசந்தன் (பிரான்ஸ்), முகுந்தன் (பிரான்ஸ்), பார்த்தீபன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், செல்வச்சந்திரன், மனோகௌரி (பிரான்ஸ்), சுமதி (பிரான்ஸ்), திலீபா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான அருந்தவநாதன், சற்குணமணி மற்றும் சிவகுருநாதன் (பிரான்ஸ்), கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அபிராமி, கார்த்திகன், ஆர்த்திகா, சதுர்த்திகன், டிசாந்தன், அஜந்தன், ஆதிசன், பிறிஸ்திகா, ஆருசா, சாயிஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.04.2023) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**076 056 8397**

(cs50145) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணுக்காய்ப் பகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், (வ-து)

# பதவி வெற்றிடம்

மேற்படி சங்கத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்காக தகைமையுள்ள விண்ணப்பதாரர்களிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வயதெல்லை :- 18 - 45**

(கூட்டுறவு பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது)

**உதவி உற்பத்தி முகாமையாளர் 108/10 வெற்றிடம் - 01**

சம்பள அளவுத்திட்டம் - 19745 - 225 x10 -250×10 - 24495 (02/2022 இன் படி)

**தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 12ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

ஆ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திர பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட வத்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் உற்பத்தி/ சந்தைபடுத்தல் / பொருள் விநியோகமும் பங்கீடும் / பொருள் இறக்குமதியும் ஏற்றுமதியும் ஆகிய பிரிவுகளில் ஒன்றில்/ அதற்கு மேற்பட்ட பிரிவுகளில் முகாமை / மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

க.பொ.த.உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/அங்கீகரிக்கப்பட்ட வத்தக /கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் உற்பத்தி/ சந்தைப்படுத்தல்/பொருள் விநியோகமும் பங்கீடும்/ பொருள் இறக்குமதியும் ஏற்றுமதியும் ஆகிய பிரிவுகளில் ஒன்றில்/ அதற்கு மேற்பட்ட பிரிவுகளில் முகாமை/ மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

**விற்பனை உதவியாளர் 308/16 வெற்றிடம் - 01**

சம்பள அளவுத்திட்டம் - 16975 - 135 x10 - 150 x10 - 19825 (02/2022 இன் படி)

**தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 17ஆவது சம்பளத்திட்டப் பதவியில் விற்பனை உதவியாளர் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்

**அல்லது**

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பரீட்சையில் சித்தி/ க.பொ.த. சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் /தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி.

**காவலாளி 315/16 வெற்றிடம் - 01**

சம்பள அளவுத்திட்டம் - 16975 - 135 x10 - 150 x10 - 19825 (02/2022 இன் படி)

**தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 17ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்

**அல்லது**

ஆ) 05ஆம் தர கல்விச் சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தினை சுயமாக தயாரித்து கல்வி தகைமை சான்றிதழ்களின் பிரதி கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினைக் குறிப்பிட்டு **தலைவர் துணுக்காய்ப் பகுதி பல. நோ.கூ. சங்கம், துணுக்காய்.** எனும் முகவரிக்கு 15.05.2023 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கப் படல் வேண்டும்.

**தலைவர்,**
**துணுக்காய்ப் பகுதி பல நோ.கூ.சங்கம்,**
**துணுக்காய்.**

(CR 39701) (N-1)

# 19ஆவது ஆண்டு நினைவு நாளும் 70ஆவது பிறந்ததின நிகழ்வும்



முன்னாள் R.B புக்கிங் சென்ரர் உரிமையாளர்

## வேலுப்பிள்ளை இராஜரட்ணம் (செல்வம்)

தோற்றம் 24.04.1953 — மறைவு 04.08.2004

*அப்பா பிறந்த நாள் வாழ்த்துக்கள்*
*அப்பா இன்று உங்களின் பிறந்த நாள்*
*பாசமாக உங்களை முத்தமிட*
*- நீங்களில்லை*
*அப்பா நீங்கள் இல்லை என்பதை ஏற்க முடியவில்லை.*

உங்கள் அன்பைத் தோற்கடிக்கும் மற்றொரு அன்பை யாரும் தரப்போவதில்லை உங்களைத் தவிர உங்கள் நினைகவுளிற்கு ஆறுதல் சொல்வது கண்ணீர் மட்டுமே. ஒரு நல்ல குடும்பத் தலைவனாக, அப்பாவாக, நண்பனாக இருந்ததிற்கு நன்றியப்பா. திரும்பவர முடியாத இடத்திற்கு நீங்கள் போய் விட்டீர்கள் ஆனாலும் காத்திருக்கின்றோம் உங்கள் வரவுக்காக கண்ணீருடன் உங்களை வாழ்த்துகின்றோம்.


**சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**உங்கள் பிரிவால் துயருறும்,**
**மனைவி, மக்கள், மருமக்கள், பேர்த்தி, பேரன்மார்கள்.**

# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 • 05 • 1942

உதிர்வு 06 • 05 • 2022



பிரபல வர்த்தகர்

## அமரர் சின்னத்தம்பி கனகையா

உரிமையாளர் Shreevishnu Associates,and Unibrown Steel (PVT) Ltd

*நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் உயர்ந்த சிந்தனையும்*
*உள்ளார்ந்த அன்பும் உரித்தான பாசமும் மென்முறுவலும்*
*கொண்ட உன் ஆனந்த முகம் கண்டு ஆண்டொன்று சென்றதையா!*
*பெருவெளியாய் காட்சியளிக்கிறது உங்களுக்கான இடமையா!*
*தன்னம்பிக்கையைத் தனித்துவமாய் கொண்டாயோ!*
*உறவுகளையே உம் சித்தனையில் கண்டாயே!*
*தன்னலமற்ற ஐயனே கற்பகன் மலரடி பறந்தாயோ!*
*வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானடைந்து ஓராண்டு ஆனாலும்*
*ஆறாது உங்கள் பசுமையான நினைவலைகள்.*
*உங்கள் அன்பு முகமும் பாசமும் எம்மை விட்டு என்றுமே நீங்காது*
*நீங்கள் எம்மைப் பிரிந்தாலும் எங்கள் ஒவ்வொரு அசைவிலும்*
*நீங்களும் வாழ்ந்துகொண்டிருப்பீர்கள்*

**உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி தினமும் உங்கள் பாதம் பணிகின்றோம்!**

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

**என்றும் உம் நினைவுகளை நெஞ்சில் சுமக்கும்**
**குடும்பத்தினர்**


No-42 Mews Street, Colombo-02.

(CS 50143)(K-1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 18 • 09 • 1933

மறைவு 23 • 04 • 2023



## திரு. J.C.J. மனுவேல்பிள்ளை (D master)

(ஓய்வுநிலைப் படவரைஞர்)

40/2, பாண்டியன் தாழ்வைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.J.C.J. மனுவேல்பிள்ளை நேற்று (23.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவேல்பிள்ளை மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மனுவேல்பிள்ளை அன்னம்மா தம்பரியரின் மருமகனும், காலஞ்சென்ற எலிசபெத்ராணியின் கணவரும், காலஞ்சென்ற றஜனிகாந்தின் தந்தையும், காலஞ்சென்றவர்களான சூசைதாசன் துரைநாயகம், தேவதாசன் துரைராஜா, மேரியோசப்பின் செபஸ்ரியாம்பிள்ளை, விமலதாசன் கிறிஸ்ரி, மேரி அன்ரனிற்றா தவராஜா, மரியதாசன் துரைசிங்கம் மற்றும் மேரி மாக்கிறட் யோசேப்பின் சகோதரனும், கிறிஸ்ரி ஜீவரட்ணம், மேரி திரோசாறதி, துரைரட்ணம், காலஞ்சென்றவர்களான மாசில்லாபூபதி, அன்ரனி நவரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (24.04.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**J.G.பிரதீபன்**
**077 369 6819**

**பாண்டியன் தாழ்வு,**
**சுண்டிக்குளி.**

(cs50144) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## லீலாவதி

யாழ்ப்பாணம் மகாத்மா வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லீலாவதி நேற்று (23.04.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காங்கேசன்துறையை சேர்ந்த காலஞ்சென்றவர்களான இராஜசிங்கம் செல்லையா அன்னப்பிள்ளை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான செல்வராணி, கமலாம்பிகை, ஆனந்தராசா, துரைரத்தினம், பத்மினி, கருணாநிதி மற்றும் மாமலர், திருநாவுக்கரசு ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான துரைரத்தினம், கந்தகுமார் மற்றும் தர்மராசா, யோகமணி, கிருஷ்ணகுமாரி ஆகியோரின் மைத்துனியும் மற்றும் அருந்ததியின் சிறியதாயாரும், பிரிதம் அவர்களின் பெரியதாயாரும், பிரியா, கௌரிசங்கர் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பப்பாச்சி அந்தியகாலசேவை மண்டபத்தில் (யாழ். மணிக்கூட்டு வீதி) இன்று (24.04.2023) திங்கட் கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No-28, மகாத்மா வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
23 - 05 - 1948



மறைவு
23 - 04 - 2023

## யோகாநந்த ஈஸ்வரக்குருக்கள் குருசாமிக்குருக்கள்

கைதடி இணுங்கித்தோட்டம் முருகன் ஆலய பிரதம குருக்கள், கைதடி வாலாம்பிகை அம்மன் கோயில் மற்றும் மூர்த்தியாவத்தை கந்தசாமி கோயிலின் குருக்களுமாகிய யோகாநந்தஈஸ்வரக்குருக்கள் குருசாமிக் குருக்கள் அவர்கள் நேற்று (23.04.2023) இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2023) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் கைதடி இல்லத்தில் இடம்பெற்று ஊரியான் இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும். இத்தகவலை உற்றார் உறவினர்கள் ஊரார்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்

077 610 5788
076 635 7393

தகவல்
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
12 - 04 - 1935



மறைவு
22 - 04 - 2023

## திரு. செல்லப்பு தேவராசா

(முன்னாள் நடத்துனர் - இலங்கை போக்குவரத்துச் சபை, கோண்டாவில்)

தாவடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பு தேவராசா நேற்று முன்தினம் (22.04.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பு - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்வமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற வர்களான பாக்கியம், நவரட்ணம், தியாகராசா மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பரம்சோதி மற்றும் தனலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், தயாபரன் (ஜேர்மனி), லயனி (லண்டன்), சுவந்தினி (லண்டன்), கஜேந்திரன் (சுன்னாகம் தபால் கந்தோர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுசானை, தவேந்திரா, பாலச்சந்திரன், தாட்சாயினி ஆகியோரின் அன்பு மாமனும், இனியா, லயனி, துசான், தவப்பிரியன், லாவண்யன், கஜிதன், யஸ்வினி, டஸ்வினி, கரணிகா, கௌத்திரி, கனிமாறன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2023) திங்கட்கிழமை முற்பகல் 1.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்

தொலைபேசி: 077 844 8558

(CS 50146)(K-1)

# இருபதாம் ஆண்டில் இதயம் சுமக்கும் நினைவுகள்

அன்னை மடியில்
20 - 05 - 1927



ஆண்டவன் அடியில்
24 - 04 - 2003

## அமரர் தொம்மை பிலிப்பு

(அண்ணாவியார்)

ஆண்டுகள் இருபது சென்றதுவோ
எம் அன்பு நிறை தந்தையே - நின்
அன்பான வதனம் கண்டு
இப்புவியில் எம் வாழ்வு சிறக்க
பல அறிவுரைகள் கூறி நின்றீர்
அன்பு மொழி பேசி எம் உள்ளமதில்
உம் வார்த்தையை விதைத்துச் சென்றீர்
முன்பட்ட வாழ்வுதனை திரும்பிப்
பார்க்க வேண்டுமென்று உரைத்து
எளிமைப் பண்பு கொண்டு நாம் வாழ
வழி சமைத்து தந்தீரே
எல்லா வித நன்மைகளையும் நன்றியுடன்
நினைக்கின்றோம் இந்நாளில்
நின் ஆன்மா இறைவனில் அமைதி
பெற இறையருள் வேண்டுகின்றோம்.

[illegible]ச்சாய் வீதி,
கொடிகாமம்.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(cs 50113) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் - ...

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை கைவிட வேண்டும், வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்படும் சிங்கள - பௌத்தமயமாக்கலை உடனடியாக முடிவுக்குக்கொண்டு வரவேண்டும் என வலியுறுத்தி நாளை செவ்வாய்க்கிழமை ஹர்த்தால் கடைப்பிடிக்கப்படுகின்றது.

'வடக்கு - கிழக்கில் அரசின் ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராகவும் அரசு கொண்டு வரத் தீர்மானித்துள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவுக்கு எதிராகவும் நாளை செவ்வாய்க்கிழமை தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தாலுக்கு எமது முழுமையான ஆதரவைத் தெரிவித்துக்கொள்கின்றோம். ஹர்த்தால் ஏற்பாடு செய்தவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். போராட்டக்காரர்களின் - மக்களின் கோரிக்கைகளை அரசு உடனடியாக நிறைவேற்றவேண்டும். ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் கொடூரச் சட்டவரைவையும் நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம். மக்கள் பிரதிநிதிகளான நாம் எப்போதும் மக்களின் பக்கம் நின்றே செயற்படுவோம்' என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன், ரவூப் ஹக்கீம் தலைமையிலான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினரும், ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியினரும் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

'பௌத்த - சிங்கள இராணுவமயமாக்கும் அரசின் செயற்பாட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும், இந்த ஹர்த்தால் ஆரம்பமே. நாம் தொடர்ச்சியாக ஒவ்வொரு மாவட்டங்களிலும் எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம். ஜனநாயகத்தை ஒடுக்க புதிய வடிவில் அரசாங்கம் கையாளும் ஆயுதமே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம். அதை அனுமதிக்கமுடியாது' என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

'நாம் எங்கள் எதிர்ப்பை வெளிக்காட்ட வேண்டும். அதைச் செய்யத் தவறினால் அரசாங்கத்தின் நடவடிக்கையை மக்கள் ஆதரிக்கின்றார்கள் என்று சர்வதேசத்துக்குச் சொல்லப்படும். அதை அவர்களும் ஏற்கும் அபாயம் இருக்கின்றது. எனவே நாம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும் சிங்கள - பௌத்த மயமாக்கல் ஆகியனவற்றை ஒன்றுபட்டு எதிர்க்க வேண்டும்' என்று தமிழ் மக்கள் கூட்டணியின் செயலர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

'பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் விளைவுகளை முழுமையாக உணர்ந்தவர்கள் நாங்கள். எனவே அதைவிட மோசமான சட்டத்தை அனுமதிக்கமுடியாது. எமது பிரதேசத்தின் குடிப்பரம்பலை மாற்றியமைக்கும் வகையிலும் தொன்மங்களை அழிக்கும் வகையிலும் சிறிலங்கா அரசாங்கத்தின் பல்வேறு நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. அவற்றை உடனடியாக நிறுத்துவதற்கு ஜனாதிபதியால் முடியும். இதற்கு காலஅவகாசம் தேவையில்லை. அதனை உடனடியாகச் செய்யவேண்டும்' என்று ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

'எங்களது விடுதலைப் போராட்டத்தை ஆட்சிக்கு வந்த எல்லா அரசுகளும் பயங்கரவாதமாகத்தான் சித்தரித்திருக்கின்றன. எனவே பயங்கரவாதம் என்ற சொல்லுடன் வருகின்ற சகல சட்டங்களையும் நாங்கள் எதிர்க்கவேண்டும். இல்லையெனில் எமது விடுதலைப் போராட்டத்தை முடக்கிவிடுவார்கள்' என்று புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

'இந்த மண்ணின் சொந்தக்காரர்கள் நாமில்லை என்பதை நிறுவுவதற்கு சிங்கள - பௌத்த பேரினவாதம் நடவடிக்கை எடுத்துவருகின்றது. அதை நாம் முறியடிக்கவேண்டும். ஹர்த்தாலுக்கு அனைத்து மக்களும் ஒன்றுபட்டு ஆதரவு வழங்கவேண்டும்' என்று ரெலோவின் ஊடகப் பேச்சாளர் கு.சுரேன் தெரிவித்தார்.

'பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வலிகளை அனுபவித்தவன் நான். அதைவிட மோசமான சட்டம் எப்படியிருக்கும் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. எம்மை ஒடுக்குவதற்கு எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையும் நாம் ஆதரிக்க முடியாது' என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் தெரிவித்தார்.

'தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழ், முஸ்லிம் சமூகம் ஒன்றிணைந்து வடக்கு - கிழக்கு மாகாணங்களை ஸ்தம்பிக்கச் செய்வோம். பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை சிங்களவர்களும் எதிர்க்கின்றார்கள். நாமும் அதை எதிர்க்க வேண்டும். மிகமோசமான அந்தச் சட்டம் கைவிடப்படவேண்டும்' என்று தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறீகாந்தா தெரிவித்தார்.

'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராகவும், வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்படுகின்ற சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் ஆக்கிரமிப்பைக் கண்டித்தும் தமிழ்த் தேசியக் கட்சிகளால் வடக்கு - கிழக்கில் நாளை செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்படும் ஹர்த்தாலுக்கு நாம் முழுமையான ஆதரவை வழங்குகின்றோம். வடக்கு - கிழக்கில் சிங்கள - பௌத்த மயமாக்கல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும், தமிழர் மீது 40 வருடங்களாகத் தலைவிரித்தாடிய பயங்கரவாதத் தடைச் சட்டம் புதுப்பிக்கப்படுவதும் உடன் நிறுத்தப்படவேண்டும்' என நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

(அ-ஒ.5,22)

## போராட்டங்களால்..

வீழ்ச்சிக்கு இட்டுச் சென்றது என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நாளை முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் தொடர்பில் கொழும்புச் செய்தியாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

'மக்கள் போராட்டம் நடத்த முழு உரிமையுண்டு. அதற்காக பிரதேசங்களை முடக்கி வாழ்வாதாரத்தை முடக்கி போராட எவருக்கும் அனுமதி வழங்க முடியாது. ஒரு சில மக்கள் தரப்பினரின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த முழு அடைப்புப் போராட்டத்துக்கு கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். பிரயோசனமற்ற இப்படியான போராட்டங்கள் தான் நாட்டை கடந்த காலங்களில் படுவீழ்ச்சிக்கு இட்டுச் சென்றன. நாட்டில் சகல உரிமைகளும் இருக்கின்றது என்பதற்காக எவரும் சட்டத்தை மீறி செயற்பட முடியாது. இப்படியான போராட்டங்களால் கடந்த காலங்களில் பொதுச் சொத்துக்களுக்கும் சேதம் ஏற்பட்டிருந்தமையையும் எளிதில் மறந்துவிடமுடியாது' - என்றார்.

(அ-ஒ.5,22)


## மரண அறிவித்தல்



### கார்த்திகேசு கிருஸ்ணராசா

சுன்னாகம் கிழக்கு கார்த்திகேசு கிருஸ்ணராசா (ஓய்வு பெற்ற இலங்கை மின்சார சபை ஊழியர்) நேற்று (23.04.2023) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காரத்திகேசு இராசம்மா அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை நாகம்மாவின் அன்பு மருமகனும், நாகேஸ்வரி அம்மாளின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தேவராசா மற்றும் பூபதி, ஸ்ரீதரன், பவளராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கனகேஸ்வரியின் அன்பு மைத்துனரும், ராஜீ, கிருபாகரன், ராஜமுகுந்தன், ஜெயமுகுந்தன், கிரியாஜினி, ஆகியோரின் தந்தையும், சிறீ, கிரிஸ்ரல், தீபா, கரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆசா, சிந்து, துலக்சன், கிருத்திகன், கிருசன், ஜஸ்மிதன், விகான், சிவகிரிஸ், ஜீவிதன், கருணி, கர்சி, கரீஸ்கரன், சயந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும், கிருஸ்ணா, சாத்விக் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2023) திங்கட்கிழமை பி.ப. 1.30 மணியவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் கிழக்கு EUT
077 656 6873

தகவல்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 05 . 1940



மறைவு 22 . 04 . 2023

### திருமதி புனிதவதி இராஜதுரை

சரவணை மேற்கு வேலணையை பிறப்பிடமாகவும் இந்தியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராஜதுரை புனிதவதி நேற்றுமுன்தினம் (22.04.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு சிவக்கொழுந்து தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவர்களான ரூபவதியம்மா, தில்லையம்மா, பாலசுப்பிரமணியம், பொன்னுத்துரை ஆகியோரின் பெறாமகளும், இராஜதுரையின் அன்பு மனைவியும், கமலாதேவி, தவமணி, சரசு, முருகேசபிள்ளை (அமரர்), மகேசு, ஜெகதீஸ்வரி, பரமேஸ்வரன் (அமரர்), குமரேஸ்வரன், ஜெகசக்தி, வள்ளியம்மை (அமரர்), நாகேந்திரம் (அமரர்), சின்னப்பா, கோபாலகிருஷ்ணன் (அமரர்), சின்ராசா, பிள்ளையார், செல்வம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், நகுலேஸ்வரி, தயாநிதி, குலநாயகம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், மனோகரன் (சுவிஸ்), நீலாம்பரன் (சுவிஸ்), இளங்கோபன் (சுவிஸ்), பகீரதன் (லண்டன்), வனஜா (இந்தியா), தர்மவாசன் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகேஸ்வரி, வதனி, இந்துமதி, வினோதினி, சபேசன், தாமரைச்செல்வி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அபித், அபிஷேக், அபிஷன், ஆருஷன், அபிதன், அஜிதன், இராகிதன், விஷால், அபிஷா, வேளருவி, ஆதவன், ஆதவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கடந்த (22.04.2023) சனிக்கிழமை தொடக்கம் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. நாளை மறுதினம் (26.04.2023) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் நாரந்தனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
குடும்பத்தினர்
வாசன்(மகன்):-075 351 3775.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்தஞாயிறு தாக்குதல்: மைத்திரி, ரணிலே பொறுப்பு!

## எஸ்.பி.திஸநாயக்க வலியுறுத்து



கொழும்பு, ஏப். 24

தேசிய பாதுகாப்புத் தொடர்பில் தவறிழைத்து உயிர்த்தஞாயிறு தாக்குதலுக்கு வழிவகுத்த கூட்டாட்சி அரசாங்கத்தின் தலைவர்களான மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பொறுப்புக் கூறவேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.பி. திஸநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்தஞாயிறு தாக்குதல் சம்பவம் இடம்பெற்று நான்கு ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளன. பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நியாயம் வழங்கப்படாமல் இருப்பது வேதனைக்குரியது. குற்றவாளிகளுக்கு பாரபட்சமில்லாது தண்டனை வழங்கப்பட்டு நீதி பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

நியூஸிலாந்து நாட்டில் முஸ்லிம் பள்ளியில் இடம்பெற்ற தாக்குதலுக்குப் பழிவாங்கும் முகமாக ஆப்கானிஸ்தான், இந்தியாவில் தாக்குதலை நடத்தவே முதலில் முயற்சிக்கப்பட்டது. அங்கு தோல்வியடைந்த நிலையில் தேசிய பாதுகாப்பு உறுதியற்றிருந்த இலங்கையில் நோக்கத்தை அடிப்படைவாதிகள் நிறைவேற்றியுள்ளனர். இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு அப்போதைய நல்லாட்சி அரசாங்கத்தின் அரச தலைவர்களான மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பொறுப்புக்கூற வேண்டும்- என்றார். (ச-இ)

### ஹர்த்தாலால்...

ளாதாரத்துக்கும் பாரதூரமான தாக்கத்தை செலுத்துகின்ற போராட்டமாகும். ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்துள்ள தமிழ்க் கட்சிகள் இதைக் கவனத்திற் கொள்ளவேண்டும் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்களை அடக்கி ஒடுக்கும் வகையில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு கொண்டு வரப்படுகின்றதென தமிழ்க் கட்சிகள் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளால் பரப்பப்படும் வதந்திகளை நாம் அடியோடு மறுக்கின்றோம்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட பின்னர்தான் அது தொடர்பான கருத்துக்களை வெளியிடமுடியும். சட்டவரைவில் திருத்தங்களையும் மேற்கொள்ள முடியும். அதைவிடுத்து அந்தச் சட்டவரைவுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்குவதும் ஹர்த்தால் நடத்துவதும் ஏற்றுக்கொள்ள முடியாதவை.

ஹர்த்தால் போராட்டம் மக்களின் நாளாந்த வாழ்வாதாரத்தை முடக்குகின்ற போராட்டமாக நாட்டின் பொருளாதாரத்துக்கும் பாரதூரமான தாக்கத்தை செலுத்துகின்ற போராட்டமாகும். ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்துள்ள தமிழ்க் கட்சிகள் இதைக் கவனத்திற்கொள்ள வேண்டும் - என்றார்.

இதேவேளை- ஹர்த்தாலை முன்னெடுப்பதற்கு மற்றொரு பிரதான காரணமாக வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்படும் பௌத்த - சிங்கள மயமாக்கலை தமிழ்க் கட்சிகள் குறிப்பிடுகின்றனவே என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டபோது,

தமிழ்க் கட்சிகளின் இந்தக் கோரிக்கை தொடர்பில் உரிய கவனம் செலுத்துவோம். வடக்கு - கிழக்கில் சிங்கள - பௌத்த ஆட்சியமைப்பு என்று சொல்லப்படுவது ஏற்றுக்கொள்ளமுடியாது- என்றார். (அ-ஓ.5.22)

### ஈ.பி.டி.பி....

செய்யப்பட்டுள்ளார். அவரது மோசடிக்கு துணை நின்றனர் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் கோட்டக்கல்வி பணிப்பாளரும், இன்னும் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

12 சகோதரர்களுக்கு இடையே பிரிவிடல் செய்யப்படவேண்டிய ஆதனத்தை ஒரு சகோதரர் மட்டும் முறையற்ற வகையில் தனது பெயருக்கு மாற்றிய குற்றச்சாட்டில் நெடுந்தீவுப் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர்.

நெடுந்தீவிலுள்ள ஆதனம் 12 சகோதரர்கள் இடையே பிரிவிடல் செய்யப்பட வேண்டும். எனினும் அந்த ஆதனத்தை சகோதரர்களில் ஒருவரான நெடுந்தீவுப் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் சசிகரன், சட்டத்துக்குப் புறம்பாக தனது பெயருக்கு மாற்றியுள்ளார். வெளிநாட்டில் வசிக்கும் மற்றைய சகோதரர், பங்கு ஆதனம் சட்டத்துக்கு புறம்பாக மோசடியாக விற்பனை செய்துள்ளமையை அறிந்து யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் சிறப்பு குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பில் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி குணறோயன் தலைமையிலான குழுவினர் விசாரணையை மேற்கொண்டனர்.

மோசடியாக ஆதனத்தை உரிமம் மாற்றிய நெடுந்தீவுப் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் நல்லதம்பி சசிகரனைக் கைது செய்தனர். இவர் ஈ.பி.டி.பி. கட்சியைச் சேர்ந்தவர்.

அவரது மோசடியாக முடிக்கப்பட்ட உறுதிக்கு சாட்சிக் கையொப்பமிட்ட முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர் மற்றும் ஒருவரும் என இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் மூவரும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் நாளை முற்படுத்தப்படவுள்ளனர். (அ-ஓ.26.125)

### ஹர்த்தாலுக்கு...

டத்துக்கு தாயக உறவுகள் முழுமையான ஆதரவை வழங்கவேண்டும் என பிரான்ஸ் தமிழர் மனித உரிமை மையம் மற்றும் பிரித்தானிய சைவத் திருக்கோயில்களின் ஒன்றியம் என்பன அழைப்பு விடுத்துள்ளன.

'நாட்டில் வாழும் எமது உறவுகளை எந்த பாகுபாடுமின்றி ஹர்த்தாலுக்கு ஆதரவளித்து அதனை வெற்றிபெறச் செய்து சிங்கள - பௌத்த அரசுக்கு காண்பிக்குமாறு உங்களை உரிமையுடன் வேண்டுகிறோம்' என்று கேட்டுக்கொண்டுள்ளன. (அ-ஓ.இ)

### சலூன்கள்...

போராட்டத்துக்கு வடக்கு மாகாண அழகக சங்கங்களின் சமாசம் முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளது.

சமாசத் தலைவர் உதயசங்கர் வெளியிட்டுள்ள ஊடகஅறிக்கையில், வடக்கு - கிழக்கு அழகக சங்கங்கள் ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் பல காத்திரமான பங்களிப்புக்களை வழங்கியுள்ளது. ஜனநாயகப் போராட்டங்கள் அனைத்துக்கும் கட்டமைக்கப்பட்ட ஒரு அமைப்பாக முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கியுள்ளது. அதனடிப்படையில் நாளைய போராட்டத்துக்கும் நாம் ஆதரவு வழங்குகின்றோம்'- என்றுள்ளது. (அ-ஓ.20)

### சட்டத்தரணிகள்...

லுக்கு வவுனியா வலய சட்டத்தரணிகள் சங்கம் முழுமையான ஆதரவை வழங்குவதாகத் தெரிவித்துள்ளது. நீதிமன்றில் நாளைய தினம் சட்டத்தரணிகள் முன்னிலையாகமாட்டார்கள் என்றும் அந்தச் சங்கம் அறிவித்துள்ளது. மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள சட்டத்தரணிகளை உள்ளடக்கியதே வவுனியா வலய சட்டத்தரணிகள் சங்கம் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஓ.5.125)

### சந்தைகள்...

கடையடைப்புப் போராட்டத்துக்கு முழுமையான ஒத்துழைப்ப வழங்குவதாக வடக்கு மாகாண சந்தை வியாபாரிகள் ஒன்றியத்தின் தலைவர் சின்னத்துரை முகுந்தன் தெரிவித்துள்ளார்.

'புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராகவும் தமிழ் மக்களின் பூர்வீக இன, மத அடையாளங்கள் அழிக்கப்படுவதற்கு எதிராகவும் மேற்கொள்ளப்படுகின்ற இந்தக் கடையடைப்புப் போராட்டத்துக்கு வடக்கு மாகாண சந்தை வியாபாரிகள் ஒன்றியம் முழுமையான ஆதரவை வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானித்துள்ளோம். வடக்கு மாகாண சந்தை வியாபாரிகள் அன்றாடம் தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டே வாழ்வாதாரத்தைக் கொண்டு சென்று கொண்டிருக்கக்கூடிய இக்கட்டான நேரத்திலும்கூட தமிழ் மக்களின் இருப்பைக் காப்பதற்கான இவ்வாறான போராட்டங்களுக்கு எமது வாழ்வாதாரத்தையும் தாண்டி ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டிய கடப்பாட்டில் உள்ளோம். ஆகவேதான் இந்த கடையடைப்பு போராட்டத்துக்கு வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து சந்தைகளிலும் உள்ள வியாபாரிகள் வியாபார நடவடிக்கையில் ஈடுபடாமல் ஒத்துழைப்பை வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானித்துள்ளோம்' - என்றார். (அ-ஓ.இ)

### போக்குவரத்து...

யான ஆதரவு வழங்குவதாக போக்குவரத்துச் சங்கங்களும் அறிவித்துள்ளன. 'ஹர்த்தால் அன்று எமது சங்கப் பணியாளர்களால் போக்குவரத்துச் சேவை எதுவும் முன்னெடுக்கப்படாது. நாம் முழுமையான ஆதரவை வழங்குகின்றோம்' என்று யாழ். மாவட்ட கூட்டிணைக்கப்பட்ட பஸ் கம்பனிகளின் சங்கத் தலைவர் கெங்காதரன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்கத் தலைவர் ந.சற்குணராஜா ஆகியோர் தெரிவித்தனர். (அ-ஓ.5.125)

### கல்வி...

ஆதரவை வழங்குவதாக இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்தச் சங்கத்தின் யாழ். மாவட்டச் செயலர் ஜெயராஜ் குலேந்திர வொல்வின் தெரிவித்ததாவது:- கடந்த காலத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் விளைவுகளை நாம் முழுமையாக அனுபவித்துள்ளோம். இந்த நிலையில் புதிதாகக் கொண்டுவரப்படும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தால் மக்கள் எதிர்காலத்தில் பாதிக்கப்படுவார்கள். வடக்கு - கிழக்கில் உள்ள பொது அமைப்புக்கள் சார்பாக ஆதரவை வழங்குவதோடு ஒவ்வொரு ஆசிரியரும் ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்கி வலுச்சேர்க்குமாறு கோருகின்றோம் - என்றார். (அ-ஓ.5.125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளைய முழு...

இந்து அமைப்புக்களும் ஆதரவைத் தெரிவித்துள்ளன.

'தமிழ் தேசிய சக்திகளின் ஒருங்கிணைப்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள வடகிழக்கு தழுவிய கதவடைப்பு போராட்டத்துக்கு எமது பூரண ஆதரவையும் ஆசியையும் வெளிப்படுத்தி நிற்கின்றோம். அண்மைக்காலமாக வெவ்வேறு வடிவங்களில் வீரியம் பெற்றுள்ள தமிழின அழிப்புக்களுக்கு எதிராக ஒட்டுமொத்தத் தமிழினமும் தமது எதிர்ப்பைத் தொடர்ச்சியாகப் பதிவு செய்ய வேண்டியது காலத்தின் தேவையாகும். எமக்கான பயனுறுதி வாய்ந்த தீர்வுகள் கிடைக்கும் வரை ஒட்டுமொத்தத் தமிழ் மக்களின் சிவில் அமைப்புக்களும் தமிழ்த் தேசியக் கட்சிகளும் இணைந்த தொடர் போராட்டத்தின் ஓர் அங்கமாக முன்னெடுக்கப்படும் இந்தக் கதவடைப்பை அனைவரும் இணைந்து வலுச்சேர்ப்போம். இன்று வலியுறுத்தப்படும் எம் அடிப்படை உரிமைகள், மரபுரிமை சார்ந்த பிரச்சனைகளுக்குச் சரியான தீர்வுகள் உடனடியாக வழங்கப்படாவிட்டால் அடுத்த கட்டப் போராட்டங்களுக்கு தமிழ்ச் சமூகம் தயாராக உள்ளது என்பதை அரசும் சர்வதேசமும் புரியும் வகையில் எமது கதவடைப்பு ஒருமித்த ரீதியில் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் தழுவியதாக அமைய அனைத்து தரப்பினரையும் வடக்கு - கிழக்கை சார்ந்த சைவ ஆதீனங்களாகிய நாம் கேட்டு நிற்கின்றோம். அதேநேரம் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு தொடர்ந்து அரசு செவிசாய்க்காத நிலையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களின் ஏகோபித்த குரலைப் பிரதிபலிக்கும் வகையில் கோரிக்கைகள் நிறைவேறும் வரை நாடாளுமன்றத்தை புறக்கணிக்குமாறும் கேட்டு நிற்கின்றோம்' என திருகோணமலை தென்கயிலை ஆதீனத்தின் தவத்திரு அகத்தியர் அடிகளார் மற்றும் யாழ்ப்பாணம் மெய்கண்டார் ஆதீனத்தின் தவத்திரு உமாபதிசிவம் அடிகளார் ஆகியோர் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

'அரசின் அநீதியான செயற்பாடுகளை எதிர்த்து சாத்வீக ரீதியில் அரசுக்கும், உலகுக்கும் எமது உணர்வை துல்லியமாக வெளிப்படுத்துவதற்கு கதவடைப்பு மிகப் பெரிய ஆயுதமாகக் காணப்படுகிறது. இதனை பௌத்த வெறிபிடித்த இந்த அரசுக்கு எதிராக ஏந்தும் அரிய சந்தர்ப்பத்தை தமிழ்த் தேசியக் கட்சிகள் நாளை எமக்கு ஏற்படுத்தியுள்ளன. இதனை முறையாகப் பயன்படுத்தி எமது எதிர்ப்பை வெளிக்கொணரவேண்டும். இந்த அரசு கொண்டுவரும் பயங்கரவாதச்சட்டத்தை சிங்கள மக்களை காட்டிலும் தமிழருக்கெதிராகப் பிரயோகிக்கும் சாத்தியக்கூறுகளே அதிகமாகத் தென்படுகின்றன. ஆதலால் நாம் எமது எதிர்ப்பை நன்கு வெளிப்படுத்த வேண்டுமென்று அனைவரையும் அன்புரிமையோடு கேட்டுக் கொள்கிறேன்' என இந்து சமயப் பேரவையின் தலைவர் ஈசான சிவ சக்திகிரீவன் தெரிவித்துள்ளார்.

(அ-ஒ.5,125)

## நாளைய...

இதற்கு எதிராக யார் போராடினாலும் எமது ஆதரவு இருக்கும். வடக்கு-கிழக்கு தழுவிய ரீதியில் நாளை செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்படும் ஹர்த்தாலுக்கு மக்கள் விடுதலை முன்னணி தனது ஆதரவுகளை வழங்குகின்றது - இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளருமான இராமலிங்கம் சந்திரசேகரம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் விரோத ஆட்சியாளர்கள் தங்களுடைய ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதற்கு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள் போன்றவற்றை உருவாக்குகின்றனர். இதற்கு எதிராக மக்கள் தங்களுடைய ஜனநாயக உரிமைகளைக் கோரி நிற்கின்றார்கள். மக்களை முடக்குகின்ற பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தை நாடாளுமன்றத்தில் முடியாவிட்டால் நாடாளுமன்றத்தின் வெளியில் நின்றாவது தோற்கடிக்கவேண்டும். அதற்கான முயற்சிகளில் தேசிய மக்கள் சக்தி செயற்படும். தனித்தனியாக யார் இதற்கு எதிராகப் போராட்டத்தை நடத்தினாலும் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தேசிய மக்கள் சக்தி என்ற வகையில் ஆதரவை வழங்குவோம் - என்றார்.

(அ-ஒ.14.125)

## கிழக்கிலும்...

சம்மேளனமும் ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை முற்றாக எதிர்க்கின்றோம். கடந்த 30 ஆண்டுகளாக தமிழர்களுக்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டம் திணிக்கப்பட்டிருந்தது. அண்மைக்காலமாக முஸ்லிம் சகோதரர்கள் மீதும் திணிக்கப்பட்டிருந்தது. தற்போது அரகலய போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு எதிராக அது திணிக்கப்பட்டு இருந்தது. சிங்கள மக்களும் இந்தச் சட்டத்தை எதிர்த்துள்ளனர். ஆட்சியாளர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் போராட்டங்களை ஒடுக்க இப்படியான கருவிகளைப் பயன்படுத்துகின்றனர். எனவே நாளை நடைபெறும் ஹர்த்தாலுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குகின்றோம்' என்று திருகோணமலை சிவில் சமூகங்களின் கூட்டமைப்பின் பிரதான செயற்பாட்டாளர் திருநாவுக்கரசு கோபகன் தெரிவித்தார்.

'சிறுபான்மை இனங்களை ஒடுக்க முற்படும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராக முன்னெடுக்கப்படும் ஹர்த்தாலுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம்' என்று அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளத்தின் தலைவர் எஸ்.எம்.சபீஸ் தெரிவித்தார்.

'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்ச்சியாக தமிழர்களின் இருப்பை நசுக்குகின்ற ஒரு கருவியாக கொண்டுவரப்படவுள்ள நிலையில் அதனை எதிர்த்து வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தாலுக்கு எமது பூரண ஆதரவைத் தெரிவிக்கின்றோம்' என்று மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூகச் செயற்பாட்டாளர் ஒன்றியத்தின் தலைவர் சபாரத்தினம் சிவயோகநாதன் தெரிவித்தார்.

(அ-ஒ.5,22,125)

## பணத்துக்காகவே...

யிருந்தவர் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டிருந்தார். அவரை 48 மணி நேரம் பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

'அவர்களின் (கொலையுண்டவர்களின்) வீட்டில் தங்கியிருந்தேன். எனக்கு பணம் தேவை என்பதனால் அவர்கள் அணிந்திருந்த நகைகளை அபகரிக்க முடிவெடுத்தேன். தனியாக நகைகளைக் கொள்ளையிட்டால் பிடித்துவிடுவார்கள். அதனால் சம்பவத்தைத் திசை திருப்பவே அனைவரையும் கொலை செய்தேன்' என்று கைது செய்யப்பட்டவர் பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.



சந்தேகநபரிடமிருந்து 26 தங்கப் பவுண் நகைகள், ஆடைகள் மற்றும் அலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் கூறினர்.

நெடுந்தீவு மாவிலி இறங்குதுறையை அண்டிய 12ஆம் வட்டாரத்தில் கடற்படை முகாமுக்கு அண்மையிலுள்ள வீடொன்றில் இருந்து வெட்டுக்காயங்களுடன் 5 சடலங்கள் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டன. சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத்தின் கட்டளையில் யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் விசாந்தின் வழிகாட்டலில் பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் துரித விசாரணைகளை முன்னெடுத்தனர். பொலிஸ் குழுவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நெடுந்தீவில் நடமாடிவிட்டு நேற்றுமுன்தினம் காலை அங்கிருந்து வெளியேறிச் சென்ற நபரை புங்குடுதீவில் வைத்து கைது செய்தனர்.

ஜேர்மனியில் கொலை முயற்சி வழக்கொன்றில் குற்றவாளியாகக் கண்டறிந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட 51 வயது நபரே கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து அதிகளவு தங்கநகைகள் கைப்பற்றப்பட்டன. அதுதொடர்பில் விசாரணை மேற்கொண்டபோதே சந்தேகநபர் தானே கொலை செய்ததாக ஒப்புக்கொண்டார்.

'நான் நெடுந்தீவு வந்தால் குறித்த வயோதிபர்களின் வீட்டில்தான் தங்கிச் செல்வேன். அதுபோன்று கடந்த சில தினங்களுக்கு முன் வந்து தங்கியிருந்தேன். அங்கு வெளிநாட்டிலிருந்து வந்திருந்தவர்கள் நகைகள் அணிந்திருந்தனர். அனைவரது நகைகளையும் அபகரித்து விற்பனை செய்து வரும் பணத்தில் கடவுச்சீட்டு பெற்று நான் மீளவும் ஜேர்மனிக்குச் செல்லத் திட்டமிட்டேன். அதனால் அதிகாலை 4.30க்குப் பின்னர் நித்திரையிலிருந்த அனைவரையும் கொலை செய்துவிட்டு நகைகளை எடுத்துக்கொண்டு தப்பிக்க எண்ணினேன். நகைகளை மட்டும் அபகரித்துச் சென்றால் பொலிஸார் எளிதில் பிடித்துவிடுவார்கள். அதனால் பொலிஸ் விசாரணையை திசை திருப்ப அனைவரையும் கொலை செய்தேன்' என்று சந்தேகநபர் பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபரை நெடுந்தீவுக்கு அழைத்துச் சென்று ஏனைய சான்றுப்பொருள்களை மீட்கும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

(அ-ஒ,26)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 07 - 08 - 1946 |  | 23 - 04 - 2023 |

## சிவஸ்ரீ சின்னஸ்வாமி சர்மா பாலஷண்முக குருக்கள்

(முன்னாள் பிரதமகுரு - சீரணி நாக பூசணி அம்பாள் ஆலயம்)

மானிப்பாய் கட்டுடையைச் சேர்ந்த சிவஸ்ரீ சின்னஸ்வாமி சர்மா பாலஷண்முக குருக்கள் (முன்னாள் பிரதமகுரு - சீரணி நாக பூசணி அம்பாள் ஆலயம்) நேற்று (23.04.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவன் திருவடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னஸ்வாமி சர்மா இந்திராக்ஷி அம்மா தம்பதியரின் மகனும், ஸ்ரீமதி கமலேஸ்வரி அம்மாவின் அன்புக் கணவரும், ஸ்வேதினி, ஹம்சினி, பால சின்மயக் குருக்கள் ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரகுமாரக் குருக்கள் ஸ்ரீகாந்தசர்மா, பார்க்கவி ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான காயத்திரிதேவி, சோமாஸ்கந்தசர்மா மற்றும் சுகந்தி குந்தளாம்பிகை, கல்யாணி, ஹேமமாலினி, பத்மநாபக் குருக்கள் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற இலட்சுமிகாந்தசர்மா மற்றும் பிரணதார்த்திஹரக் குருக்கள், ரஞ்சிதானந்தக் குருக்கள், கிருஸ்ணகுமாரக் குருக்கள், மைதிலி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஸேவிதா, தபஸ்வினி, சித்திராங்கி அநார்த்விகா, ஸ்ரீமதுஜா, ஜஸ்வந்த், அக்ஷயா, ஆகர்ஷன், அத்வைதன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

அரசடிப்பிள்ளையார் வீதி,
கட்டுடை, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்

(cs24581) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதையல்தோண்டிய 7 பேர் நேற்றுக் கைது

முல்லைத்தீவு, ஏப். 24

புதுக்குடியிருப்பு, ஆனந்தபுரம் பகுதியில் தனியார் காணியில் நேற்றுப் புதையல்தோண்டிய தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். புதையல் தோண்டுவதற்கு அவர்கள் பயன்படுத்திய உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

ஆனந்தபுரம் இறுதிப் போர் நடைபெற்ற பகுதி. விடுதலைப்புலிகளின் தங்கங்கள் இந்தப் பகுதியில் இருப்பதாகத் தெரிவித்து தென்பகுதியைச் சேர்ந்த பலர் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு கடந்த காலங்களில் கைதாகியிருந்தனர்.

இந்த நிலையில் தனியாருக்குச் சொந்தமான வெறும் காணியில், உரிமையாளர் அங்கு இல்லாத நிலையில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் இவர்கள் நேற்று ஈடுபட்டுள்ளனர்.

இந்தக் காணியில் இரு இடங்களில் புதையல் தோண்டப்பட்டுள்ளது. அவ்வாறு தோண்டும்போது அருகிலிருந்த இராணுவமுகாம் சிப்பாய்களின் கண்ணில் பட்டுள்ளதைத் தொடர்ந்து இராணுவத்தினர் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு தகவல் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அங்கு சென்ற பொலிஸ் குழு புதையல் தோண்ட முற்பட்டவர்களை கைதுசெய்துள்ளார்கள்.

கொக்கிளாயைச் சேர்ந்த தமிழர்கள் 3 பேரும் மற்றும் யாஎல, மேகமுவ, வெல்லம்பிட்டிய, களனி ஆகிய இடங்களைச் சேர்ந்த பெரும்பான்மையினத்தவர் நால்வர் உள்ளிட்ட 7 பேரை கைது செய்துள்ளனர். (ஓ.19)

# மின்னல் தாக்கி பெண் காயம்

முல்லைத்தீவு, ஏப். 24

புதுக்குடியிருப்பு, குரவில் கிராமத்தில் மின்னல் தாக்குதலுக்கு இலக்கான குடும்பப் பெண் ஒருவர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அம்மாசி வளர்மதி (வயது -55) என்பவரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

கடந்த 21 ஆம் திகதி மாலை புதுக்குடியிருப்பு- உடையார்கட்டு பிரதேசத்தில் கடும் காற்று மற்றும் இடியுடன் மழைபெய்துள்ளது. அப்போது பெண் ஒருவர் வீட்டு வாசலுக்கு வந்தபோது மின்னல் தாக்கத்துக்கு இலக்காகி தூக்கி வீசப்பட்டு மயக்கமடைந்த நிலையில் அயலவர்களால் மீட்கப்பட்டு மூங்கிலாறு ஆதார மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டு அங்கிருந்து புதுக்குடியிருப்பு பிரதேச மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளார்.

மகள் ஒருவர் போரில் உயிரிழந்த நிலையில் மகன் ஒருவர் காணாமற்போன நிலையிலும் மிகவும் வறுமையில் வாடிவருபவரின் குடும்பத்துக்கே இந்த இடர் நிகழ்ந்துள்ளது. மின்னல் தாக்கம் காரணமாக வீட்டிலிருந்த பொருள்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. (அ-ஓ.19)

# பலாலிக் கடலில் 26 கிலோ கஞ்சா

யாழ்ப்பாணம், ஏப். 24

பலாலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பலாலிக் கடற்பரப்பில் 26 கிலோ கிராம் கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளதாக பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

கடற்படையினருக்குக் கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவலுக்கமைய கஞ்சாவையும் அதனைக் கடத்துவதற்குப் பயன்படுத்திய சிறு படகையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். அத்துடன் பலாலி அன்ரனிபுரத்தைச் சேர்ந்த இளைஞனையும் சந்தேகத்தில் கைது செய்துள்ளனர். (அ-ஓ.125)


## வேலையாட்கள் தேவை

கோண்டாவிலில் அமைந்துள்ள பலசரக்குக் கடை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

077 215 4940, 077 4361 021

## வேலைவாய்ப்பு

பிரபல நிறுவனத்தில் பல வகையான வேலை வாய்ப்புக்கள் உள்ளன. முந்தும் 18 பேருக்கு முன்னுரிமை . உடன் தொடர்புகொள்ளவும்.

076 020 9066

## காணி விற்பனைக்கு

யாழ். நாவற்குழி A-09 வீதியில் இரண்டாம் காணி 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- ✓ இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ✓ குடியிருப்பு உள்ள சூழல்
- ✓ நன்னீருற்று சூழல்
- ✓ 1 பரப்பின் விலை 650,000/= ரூபா மட்டும்.

076 4365 814, 077 0654 525

## வீட்டுத் தோட்ட பராமரிப்பாளர் தேவை



கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு அண்மையாக வீட்டுத்தோட்டத்தைப் பராமரிப்பதற்கு அனுபவம் உள்ள ஒருவர் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். பகுதிநேரமாகவோ அல்லது முழுநேரமாகவோ பணியாற்றலாம்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்

தொடர்பு : 0771209998

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 18 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி. புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- 1 பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும் (120,000/=)
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்

பார்வையிடும் நேரம்

காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை

தொடர்பு:- 076 755 8606
077 638 5683

(CS 50091) A-1


## காணி விற்பனைக்கு உண்டு

- ✻ யாழ்ப்பாணம் புத்தூரில் 30 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு

- ✻ பருத்தித்துறை வீதி. புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- ✻ மூன்று பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.
- ✻ நன்னீரூற்று
- ✻ குடியிருப்பு சூழவுள்ள பகுதி
- ✻ பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை. (முழுக்காணிகளும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது).

(ஒரு பரப்புக் காணியின் விலை மூன்று இலட்சம் (300,000/=)



தொடர்பு:

076 9119 371
076 165 3129

(CS 50092) A-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A-9 பிரதான வீதியுடன் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு

- ✓ 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ✓ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ✓ திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ✓ ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்

பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.

தொடர்புகளுக்கு: ஜெயம்
077 8147 389
077 9865 457

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 06 ப்ரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு

- ✓ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- ✓ A-9 பிரதான வீதியில் இருந்து 700M தூரம்.
- ✓ காய்க்கும் தென்னைகள் 36 உள்ளன.
- ✓ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ ஒரு பரப்பின் விலை 19 இலட்சம் முதல் 17 இலட்சம் வரை

பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.

தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு: ஜெயம்
077 8147 389
077 9865 457

(CS 24346) (1-1) (CS 24547) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 web: www.uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.